

நாடாளுமன்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் நாடாளுமன்ற நிலைக்குழு பணிகளின் பகுதியாக, நவம்பர் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் மும்பையில் நடைபெற்ற மதிப்பாய்வு கூட்டத்தில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.கிரிராஜன், க.செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### சாலவாக்கம் ஒன்றியத்தில் இளைஞர் எழுச்சி நாள்

# 1000 இளைஞர்கள் பங்கேற்ற பேரணி

### க.சுந்தர் எம்.எல்.ஏ. - அப்துல் மாலிக் தொடங்கி வைத்தனர்

காஞ்சிபுரம், நவ. 24 .

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் 27 இளைஞர் எழுச்சி நாளை யொட்டி சாலவாக்கத்தில் நேற்று மாலை கொண்டா டப்பட்டது. இதில் மாவட்ட செயலாளர் க.சுந் தர் எம்எல்ஏ, மாநில இளை ஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் கலந்து கொண்டு பிறந்த நாள் விழாவில் ஆயிரம் பேருக்கு கலந்து கொண்ட இளைஞர் பேரணியை தொடங்கிவைத்து 49 கிலோ கேக்கினை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலா ளர் க.சுந்தர் எம் எல் ஏ வெட்டிஏழை எளியவர்க ளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன் றிய செயலாளர் டி. குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், துணை அமைப்பாளர்கள் மணி, ஆண்டோ, சஞ்சய் காந்தி பால்ராஜ்,ஒன்றிய இளைஞரணி செயலாளர் வெங்கட்ராமன் ஒன்றிய நிர்வாகிகள் சத்யா சக்தி வேல், வெங்கடேசன், ரவி, சிவராமன், சேகர் பாலமுரு கன், பாண்டியன் பாபு ஷரீப், வசந்த மாலா, முரளி, நந்தா, உள்ளிட்ட ஏராள மான கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த (SIR) பொறுப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த (SIR) களப்பணிகள் குறித்து கேட்டறிந்து இரவு பகல் பாராமல் அயராமல் களப்பணியாற்றிடுமாறு அறிவுறுத்தினார். உடன் தொகுதி பார்வையாளர் சண்முகநாதன் உட்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நிர்வாகிகள் உள்ளனர்.

### இளைஞர் எழுச்சி நாள் - வரும் சட்டமன்றத் தேர்தல் பணி குறித்து

# சோழிங்கல்லூர் மத்திய பகுதி ஆலோசனைக் கூட்டம்!

### அ.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. – டாக்டர் நா.சந்திரபாபு பங்கேற்பு!

சென்னை, நவ. 24

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாள ரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் ஆலோசனைப்படி, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக செயலாளர் சட் டமன்ற உறுப்பினர் ச.அர விந்த்ரமேஷ் தலைமையில், தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நா.சந்திரபாபு முன்னிலையில் நேற்று 20-11-2025 நடைபெற்ற கலந் தாய்வு ஆலோசனைக் கூட் டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வரு கின்ற 27-11-2025 அன்று இளைஞர் எழுச்சி நாளை அனைத்து வார்டுகளிலும் கழக இருவண்ணக் கொடி ஏற்றி பொது மக்களுக்கு அன்னதானம் வழங்க வேண்டுமெனவும்,

சோழிங்கநல்லூர் மத் திய பகுதியில் அனைத்து வட்டங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணியில் ஈடுபட் டுள்ள (BLO) பாகநிலை அலுவலர்களுடன், BLA2, BDA,BLC ஆகியோர்கள் வாக் காளர் உதவி மையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான (Special Intensive Revision) கணக்கீட்டுப் படி வங்களை வாக்குச் சாவடி நிலை அலுவலர்களின் வழி காட்டுதலுடன் பூர்த்தி செய்வதற்குரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

வருகின்ற 28-11-2025 அன்று G.P.ஜனராஜன் திரு மண மண்டபத்தில் நடை பெற உள்ள கருத்தரங்கில் பகுதிக்குட்பட்ட கழக நிர் வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண் டுமென எடுத்துரைக்கப்பட் டது.

இக்கூட்டத்தில், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி துணை செயலாளர் கள் வி.தனசேகரன், வி.வி. குமரேசன், பகுதி கழக பொருளாளர் கே.டி. ரவி, சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், ஜி.சங்கர், ஏ.முருகேசன், வட்ட கழக செயலாளர்கள் வ.பாபு, டி.ராஜேந்திரன், ஆர்.நாகராஜ், ஏ.ஆரோன் (எ) அரசு, ஜி.ரவி, பா.தேவ குமார், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண் டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வாக்கு சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் வார்டு –1, வார்டு 3 (அ), வார்டு–4 ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் பகுதி கழகச் செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ மற்றும் மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவரும் தொகுதி பார்வையாளருமான தியாகராயர் நகர் எஸ்.மோகன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மொழிப்போர் தியாகி ஓய்.அரங்கநாதனின் சகோதரரின் புதல்வர்

# டாக்டர் எஸ்.குப்புசாமி மறைவு!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!



சென்னை, நவ. 24

சென்னை தெற்கு மாவட்டம், மொழிப் போர் தியாகி ஓய். அரங்கநாதன் அவர்களின் அண் ணன் மகன் விரு கம்பாக்கம் ஓய். சுந்தரம் அவர்களின் மூத்த மகனும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் சு.இளங் கோவன் அவர்களின் மூத்த சகோதரருமான விரு கம்பாக்கம் பகுதியில் முதல் மருத்துவ டாக்டர் பட்டம் பெற்ற டாக்டர் எஸ்.குப்பு சாமி (வயது 74) அவர்கள் நேற்று (23.11.2025 ஞாயிற் றுக்கிழமை) நண்பகல் இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந் ததும் கழக நிர்வாகி கள் அன்னாரின் உட லுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (24.11.2025 திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில், சென்னை, அய்யப்பன்தாங்கல், சீனி வாசபுரம், ஆர்.ஆர்.நகர் அனெக்ஸ், 1 வது தெரு, எண்.4/128, அமைந்துள்ள அவர்களது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்ல டக்கம் செய்யப்படும் என் பதை ஆழ்ந்த வருத்தத்து டன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஆரணி பேரூரில் வாக்காளர் சரிபார்க்கும் பணி!

### பேரூர் செயலாளர் பி.முத்து – எஸ்,ரோஸ் பொன்னையன் – கழகத்தினர் பங்கேற்பு

திருவள்ளூர், நவ. 24 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், ஆரணி பேரூ ரில் எஸ். ஐ.ஆர். வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மாவட்டச் செயலா ளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவுறுத்தலின்பேரில் 15 வட்டங்களிலும் பேரூர் செயலாளர் பி..முத்து, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ரோஸ் பொன்னையன் ஆகி யோரது முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி ஆரணி பேரூராட் சியில் பேரூருக்கு உட் பட்ட 15 வார்டுகளில் வாக் காளர் சேர்த்தல் - நீக்கல் முகவரி மாற்றும் (எஸ்.ஐ.ஆர்.) திருத்தப் பணி கள் நடைபெற்றது.

மற்றும் 12-வது பூத்துக்குட்பட்ட பகுதிக ளில் வழக்கறிஞர் ரமேஷ் பொருளாளர் ஜி.கரிகாலன், பி.எல்.ஏ.2 க்கள் உதயகு மார், ஈ.சாஜாவித், சாலேக், நீலகண்டன், டி.கோபிநாத், மகேந்திரன், டி.ஜெயக்கு மார், வழக்கறிஞர்கள் வி. சுரேந்தர், கே.கவியரசு, எஸ்.ஜெகனாதன், ஓவியர் பன்னீர்செல்வம், எம்.சுல் தான், ஐ.டி. சந்தோஷ், எஸ்.பி.உமாபதி, டி.பாஸ் கர், புதுநகர் பாலாஜி, எஸ். நாகராஜ், டில்லி உள்ளிட்ட பி.எல்.ஓ.க்கள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பல்லாவரம் மறைமலை அடிகளார் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளம் கலாம் என்ற நிறுவனத்தின் சார்பில் அறிவியல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு சோலார் கார் தயாரிப்பு குறித்த பயிற்சி அளித்து சோலார் கார் பயிற்சி கிட்டுகளை வழங்கினார். மேலும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் கூறி சிறப்பு உரையாற்றினார். அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தனியார் நிறுவன நிர்வாகிகள் பெற்றோர் ஆசிரியர்கள் கழகத் தலைவர் ராஜ்குமார் பரமசிவம் வீடியோ ஹரி உடனிருந்தனர்.





